**செய்தி வெளியீடு எண் : 1516** **நாள் : 02.09.2022**

# மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள் சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகம் புனரமைக்கும் பணியை ஆய்வு மேற்கொண்டார்.

இன்று (02.09.2022) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகம் புனரமைக்கும் பணியை மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே.மணிவாசகம், இ.ஆ.ப., முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு. இரா.விஸ்வநாத், பள்ளிக்கல்வித்துறை இணை இயக்குநர் (தேர்வு) திரு.செல்வகுமார் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உடனிருந்தனர்.

**பின்னர், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில்,**

ஆசியாவின் இரண்டாவது மிகப்பெரிய நூலகமான, சென்னையில் இருக்கின்ற குறிப்பாக கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள அண்ணா நூற்றாண்டு நூலகம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கட்டப்பட்டது. அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிண்டன் அவர்களின் மனைவி ஹிலாரி கிளிண்டன் அவர்கள் இந்த நூலகத்தை பார்வையிட்டபோது "இதுபோன்று பரந்து விரிந்து மிக அதிகமான புத்தகங்களை கொண்ட நூலகத்தை வேறு எங்கும் கண்டதில்லை" என்று கூறியது குறிப்பிடத்தக்கது.

புதியதாக ஆட்சி பொறுப்பேற்ற, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சிதிலமடைந்த அண்ணா நூற்றாண்டு நூலகத்தை சீர்செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு, 25.10.2021 அன்று அரசாணை வெளியிடப்பட்டு ரூ.32.49 கோடி ஒதுக்கீடு செய்தார்கள். அதில் சிவில் பணிக்காக ரூ.18.26 கோடியும், மின் பணிக்காக ரூ.14.23 கோடியும் ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் 30.9.2022 அன்று முடிவடைய வேண்டுமென்று ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

இந்நூலகம் 8 தளங்களை உள்ளடக்கியது, ஒவ்வொரு தளங்களாக பார்த்து, எங்கெல்லாம் பணிகள் தொய்வு ஏற்பட்டுள்ளது, எங்கெல்லாம் பணிகள் விரைவுப்படுத்தப்பட வேண்டும் என்று விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. தற்போது புதியதாக 30,160 சதுர அடி அளவிற்கு தரைவிரிப்பு அமைக்கப்பட்டுள்ளது, புதியதாக எல்.இ.டி. பல்புகள் பொருத்தப்பட்டுள்ளது. மேலும், மின்சாரம் இல்லாத நேரத்தில் ஜெனரேட்டர் பயன்படுத்தப்பட்டு வந்தது, அது பழுதடைந்த நிலையில் தற்போது புதியதாக அதிக மின்சக்தி கொண்ட ஜெனரேட்டர் பொருத்தப்பட்டுள்ளது.

இந்நூலகத்தில் ஓலைச்சுவடிக்கென 7வது தளம் அமைந்துள்ளது, அதில் உள்ள ஓலைச்சுவடிகளை தற்போதுள்ள தொழிற்நுட்பத்தை பயன்படுத்தி பாதுகாத்திடவும், மக்கள் பார்வைக்கு சென்றடையவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது, 90% சதவீதப் பணிகள் முடிவடைந்த நிலையில் சுத்தம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வருகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in